JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 31-2015 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW9 | Prosecution /Defence / Court | |
| Name | Singaraj | Caste | |
| Father's Name | Chinnathambi | Calling | |
| Village | Krishnapuram, Vijayamangalam | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of
Date: 12.10.2021

முதல் விசாரணை

நான் மேற்படி விலாசத்தில் குடியிருந்துகொண்டு விஜயமங்கலத்தில் உள்ள கிருஷ்ணாபுரத்தில் பழைய இரும்பு கடை வைத்து தொழில் செய்துவருகிறேன். கடந்த 26.11.2014 ஆம் தேதி எதிரி இம்ரான் என்பவர் எனது கடைக்கு வந்து அவரது மனைவிக்கு உடல்நிலை சரியில்லை என்று 2 தோடு மற்றும் ஒரு மோதிரம் ஆகியவற்றை அடமானம் வைத்தார். அதன் எடை 5.5 கிராம். அதற்கு நான் ரூ.4000/- கொடுத்தேன். அதன்பின்னர் 19.12.2014 பெருந்துறை காவல் ஆய்வாளர் அவர்களும் இம்ரானும் 3.15 மணிக்கு கடைக்கு வந்து பணத்தை கொடுத்து என்னிடம் அடகு வைத்த நகையை பெற்றுச்சென்றனர். என்னிடம் அடமானம் வைத்ததை நான் ஒப்படைத்ததற்காக என்னிடம் கையெழுத்து பெற்றார்கள். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள ஒப்படைத்தவர் என்ற கையெழுத்து என்னுடையதுதான். அந்த **கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.8**. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>.,**

நான் கடந்த 17 வருடங்களாக பழைய இரும்புக்கடை வைத்து தொழில் செய்துவருகிறேன். என்னிடம் இரும்புகளாக கொடுக்கும் சாமான்களை உடைத்து தொழில் செய்துவருகிறேன். இது தவிர வேறு எந்த தொழிலும் எனக்கு கிடையாது என்றால் சரிதான். நகைகளை அடகுக்கு வாங்கி பணம் கொடுக்கும் தொழில் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி இம்ரானின் மனைவி யாரென்று எனக்கு தெரியாது என்றும் அவர் அன்றைய தினம் அவரது மனைவியை அழைத்துவரவில்லை என்றால் சரிதான். நான் நகையை பெற்று எடைபோட்டுபார்த்தேனா என்றால் இல்லை. மேற்படி நகை உண்மையாக தங்க நகையா என்று நான் பரிசோதித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். இதற்கு முன்னர் என்னிடம் இம்ரான் நகை கொடுத்து பணம் வாங்கியதில்லை என்றால் சரிதான். அன்றைய தினம் நான் பணம் கொடுத்தற்கு ரசீது எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அந்த நகையை நான் உபயோகிப்படுத்திக்கொள்ளுமாறும் அதற்கான பணத்தை தருமாறும் கூறினார் என்றால் சரிதான். அன்றைய தினம் காவல் ஆய்வாளர் என்னிடம் 4000/- ரூபாய் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த நகையில் அடையாளம் ஏதேனும் இருந்ததா என்றால் இல்லை. போலீசார் விசாரணையில் வெள்ளை பச்சைக்கல் உள்ள தோடு என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் காவல்நிலையம் செல்லவில்லை என்றால் சரிதான். இம்ரானும் காவல் ஆய்வாளரும் தவிர வேறு யாரும் அங்குவரவில்லை என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த காகிதத்தில் வேறு யாரும் கையெழுத்திட்டார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அச்சமயம் வேறு யாரும் என்னுடன் இருந்தார்களா என்றால் யாரும் இல்லை. இரும்பு ஏதேனும் திருட்டு போனால் போலீசார் என்னை விசாரிப்பார்கள் என்றால் சரிதான். நான் ஏதேனும் அப்படி திருட்டு பொருட்களை வாங்கியுள்ளேனா என்று விசாரிப்பார்கள் என்றால் சரிதான். இம்ரான் என்னிடம் நகையை கொடுத்ததாக சொல்வது பொய் என்றும் நான் இரும்பு வியாபாரம் செய்வதால் போலீசாரிடம் எனக்கு பழக்கம் உள்ளதென்றும் எனவே

போலீசார் கேட்டுக்கொண்டதன்பேரில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, 3சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.

Signature of the Witness

Name of the Interpreter
Tmt.K.S.Shabeena, B.A.B.L.
Judicial Magistrate,
Perundurai.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the-----day of --------------2021.

Signature of Interpreter